**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 25/2017**

**வாதி தரப்பு சாட்சி-2 பாலமுருகன் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **பாலமுருகன்** | கிராமம் | பண்ணைப்பட்டி |
| த/பெ / க/பெ. | ஜெயராஜ் | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | |

**முதல் விசாரணை**

1) பண்ணைப்பட்டி கிராமத்தை சேர்ந்த சுப்பிரமணியன் மனைவி தனலெட்சுமி என்பவர் வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டாவை ரத்து செய்ய மனு கொடுத்தாரா என்றால் ஆமாம். மேற்படி கிராம பட்டா எண் 1041, சர்வே எண்கள் 710/4, 710/5. இது சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியர் தரப்பினருக்கு அழைப்பாணை அனுப்பி முறையாக விசாரணை நடத்தி 02.03.2024 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார். மேற்படி அழைப்பாணை மற்றும் உத்தரவு சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 710/4 பற்றி மேற்படி உத்தரவின் என்ன குறிப்பிட்டுள்ளது என்றால் சர்வே எண் 710/4 காலி இடம் என்றும், அதில் தனலெட்சுமி கணவர் பெயர் சுப்பிரமணியம் என்பவருக்கு இலவச வீட்டு மனை பட்டா 0.01.0 ஏர்ஸ் வழங்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) சர்வே எண் 710/4, மற்றும் 710/5 நிலங்கள் குறித்து போலி ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளதால் கிராம கணக்குகளில் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது என்றும், எனவே கடவூர் வட்டாட்சியரிடம் மனு செய்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. சர்வே எண் 710/5 இராமஉடையார் மகன் ராமசாமி என்பவர் பெயரில் உள்ளது.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கு தாக்கல் செய்த 2017 ம் வருடம் நான் பண்ணப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அல்ல என்றால் சரிதான். 2022 ம் வருடம் வாதி தனலெட்சுமி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்த சமயத்திலும், நான் பண்ணப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் அல்ல என்றால் சரிதான். நான் இன்று வட்டாட்சியர் சார்பில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தனலெட்சுமிக்கு ஒப்படைப்பு நமூனா வழங்கப்பட்டதற்கான குறிப்புகள் ஏதாவது எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படுகிறதா என்றால் இல்லை, வட்டாட்சியர் அலுவலகத்தில் இருக்கும். சர்வே எண் 710/4 மற்றும் 710/5 ல் பிரதிவாதிகள் போலி ஆவணம் தயார் செய்திருப்பதாக வருவாய் கோட்டாட்சியர் உத்தரவில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் ஏதாவது பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக வேறு வழக்குகள் நடைபெற்றதா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சா.சா.ஆ.1 ஆவணத்தில் அடங்கல் பதிவேட்டில் நல்லபெருமாள் என குறிப்பிட்டு அது அடிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றால், ந.பெருமாள் என குறிப்பிட்டுள்ளார்.

2) அந்த அடங்கல் பதிவேடு என்வசம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த பதிவேட்டில் ந.பெருமாள் என்ற பெயர் அடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பெயர் அடிக்கப்பட்டதற்கான குறிப்பு எதுவும் அடங்கல் பதிவேட்டில் இல்லை. அந்த அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அடங்கல் பதிவேட்டில் எவ்வித குறிப்பும் இல்லாமல் ந.பெருமாள் என்ற பெயர் அடிக்கப்பட்டுள்ளதால், அதன் அடிப்படையில் வருவாய் கோட்டாட்சியர் பிரதிவாதிகளின் ஆவணங்களை போலியானது என முறையாக விசாரணை செய்யாமல் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**